**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**STC. No. 123/2023 PW .3**

| | |
|---|---|
| பெயர் : முத்துகருப்பன் | தந்தை/கணவர் பெயர்: ஆண்டிச்சாமி |
| ஊர் : | தாலுகா : |
| வயது : | தொழில் : சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| ஜாதி : | சமயம் : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.03.2026

**(எதிரி ஆஜர்)**

**11.03.2026 முதல் விசாரணை:**

1. நான் தற்போது புழுதிப்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் . கடந்த 19.12.2022 ம் தேதி நான் சிங்கம்புணரி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது நான் , சிங்கம்புணரி காவல் ஆய்வாளர் முத்து மீனாட்சி , அ.சா.1 , அ.சா.2 தலைமைக் காவலளர் 936 சரவணன், தலைமைக் காவலளர் 1566 மூர்த்தி, முதல் நிலை காவலளர் 630 மோகன் ஆகியோர் மது , சூது போதை பொருள் சம்மந்தமாக கோட்டை வேங்கைப்பட்டி சமத்துவபுரம் அருகே வாகனம் தணிக்கை செய்துகொண்டிருந்த போது கொடுக்கம்பட்டிலிருந்து – சிங்கம்புணரிக்கு சென்று கொண்டிருந்த சிகப்பு நிற TN 59 CY4358 TVS N TORQ என்ற சிவப்பு கலர் வாகனத்தில் ஆஜர் எதிரி வந்தார் அவரை நிறுத்தி விசாரித்த போது எங்களிடலிருந்து ஓட முயற்சி செய்தார் . பின்னர் அவரை மடைக்கி பிடித்து விசாரித்த போது அவருடைய பெயர் , முகவரியை மாற்றி சொன்னார். அதன் பின்னர் உண்மையான பெயர் முகவரியை சொன்னார்.

2. அவரையும், அவர் வைத்திருந்த வாகனத்தையும் சோதனை செய்ய வேண்டுமென்று அவரிடம் சொன்ன போது , அவர் சம்மதித்தார் . வண்டியின் இருக்கையை தூக்கி பார்த்த போது ஒரு பொட்டலம் இருந்தது . அதில் 500 கிராம் கஞ்சா இருந்தது. மேலும் பணமும் ரூ .89,500 /– இருந்தது. அந்த பொட்டலத்தை நுகர்ந்து பார்த்த போது அது கஞ்சா என்று தெரிய வந்தது . எதிரியிடம் மேல் விசாரித்த போது பணம் சுமார் ரூ.89,500/– ஏற்கனவே கஞ்சா விற்று வைத்திருந்த பணம் என்று

சொன்னார். அந்த இடத்திலேயே எதிரி ஆய்வாளர் முத்துமீனாட்சி அவர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 12.30 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து அந்த இடத்திலேயே வைத்து கஞ்சா பொருட்களும் , பணம் ரூ.89,500/- மற்றும் எதிரி பயன்படுத்திய வாகனம் ஆகியவற்றை ஆய்வாளர் கைப்பற்றனார்கள். **(அந்த அத்தாட்சி மகஜர் அ .த.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நானும் , தலைமை காவலர் மூர்த்தியும் கையொப்பம் செய்தோம். **(அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ-2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. வழக்கு சொத்துக்களுடன் எதிரியை நிலையம் அழைத்து வந்து எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. என்னை வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

3. கோட்டை வேங்கைப்பட்டியிலிருந்து சமத்துவபுரத்திற்கும்இடையே அரை கீ . மீட்டர் தூரம் இருக்கும் . கோட்டை வேங்கைப்பட்டி ரோந்திற்கு 6 நபர்கள் எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் அவரவர் தனித்தனியாக இரு சக்கரவாகனத்தில் சென்றோம். வாகன தணிக்கைக்கு செல்லும் போது மோட்டர் வாகன வழக்கு தாக்கல் செய்வதற்கு மிஷன் கொண்டு செல்வோம் . சிங்கம்புணரி காவல்நிலையத்திற்கும் சம்பவ இடத்திற்கு 11 மணிக்கு கிளம்பி 7 கி.மீட்டர் தூரம் வரை 20 நிமிடத்தில் சென்றோம். கஞ்சாவை எதை வைத்து நிறுத்தோம் என்றால் உத்தேசமாக கணக்கிட்டோம். நீதிமன்றத்திற்கு அனுப்புவதற்காக சுமார் 10 கிராம் கஞ்சாவை உத்தேசமாக தான் அங்கியிருந்து எடுத்தோம் என்றால் சரிதான் . நாங்கள் எதிரியை பிடித்த பின்பு உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தோமா என்றால் ஆமாம் தெரிவித்தோம். ஆனால் பெயரோ, செல் நம்பரோ குறிப்பிடவில்லை. ஆய்வு செய்த இடத்திற்க அருகே கிராமம், கடைகள் உள்ளது என்றால் இல்லை . நாங்கள் சுமார் 3 மணி நேரம் அதே இடத்தில் இருந்தோம் . ஆனால் யாரும் வரவில்லை . அது போக்குவரத்து நெரிசல் உள்ள இடமாகும். நாங்கள் நின்று கொண்டிருந்த போது பல பேர் எங்கள் கடந்து சென்றிருப்பார்கள் என்றால் சரிதான் . அவர்கள் யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான் . கடந்த 20 வருடங்களுக்கு மேலாக வாத்தியார் கோவிலுக்கு முன்பு சித்தன் ஜோதிட நிலையம் வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல . நான் சம்பவ

இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல . பணம், வண்டிமற்றம் கஞ்சா எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல . மேல் அதிகாரிகள் சொன்னததற்கு இணங்க எதிரி மீது பொய் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல . எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.